செய்தி வெளியீடு எண்: 53 நாள்: 13.1.2010

## செய்தி வெளியீடு

## தமிழகக் காவல் துறையில் 2801 ஆண் காவலர்கள் – 1253 பெண் காவலர்கள் புதிதாகத் தேர்வு! உள் ஒதுக்கீடு வழங்கியதால் இஸ்லாமியர், அருந்ததியர் சமுதாயங்கள் கூடுதல் பயன்! முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

தமிழகக் காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் பதவியில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக 2800 ஆண்காவலர்கள், 1200 பெண் காவலர்கள் என மொத்தம் 4000 ஆயிரம் பேரும், பின்னடைவு காலிப் பணியிடங்களாக இஸ்லாமியரில் 1 ஆண் காவலரும், 46 பெண் காவலர்களும்; பழங்குடியினரில் 10 பெண் காவலர்களும் ஆக 57 பேரும் – என மொத்தம் 4057 இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்வதற்காகத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம் தமிழகம் முழுவதும் அண்மையில் தேர்வுகளை நடத்தியது.

இத்தேர்வின் மூலம் தற்போது 2801 இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், 1253 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் என மொத்தம் 4 ஆயிரத்து 54 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில், இஸ்லாமியர்க்கு 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கிய காரணத்தினால், 99 இஸ்லாமிய ஆண்களும், 85 இஸ்லாமிய பெண்களும் ஆக மொத்தம் 184 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்றும்;

அதேபோல, அருந்ததியர் சமுதாயத்திற்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதால், 84 அருந்ததிய ஆண்களும், 36 அருந்ததிய பெண்களும் என மொத்தம் 120 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் முதலமைச்சர் கலைஞர் இன்று (13.1.2010) அறிவித்துள்ளார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.